## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKUL

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 95 OF 2022** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **மோகன்ராஜ்** |
| Father Name | : | **மாணிக்கம்** |
| Age | : | **34** |

**Accused absent**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.12.2025.

முதல் விசாரணை

1. நான் தற்போது தொட்டியவலவில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு வாகன விபத்தில் இறந்தவர் எனது தந்தை ஆவார். கடந்த 07.03.2022-ம் தேதி மாலை 06.45 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது நான் பணிபுரியும் கம்பெனியின் உரிமையாளர் யுவராஜ் எனக்கு போன் செய்து பெட்டிக்கடை பேருந்து நிறுத்தம் அருகே எனது தந்தை ஸ்கூட்டி வாகனத்தில் சென்றபோது TN 56 B 2671 என்ற பதிவு எண் கொண்ட பேஷன் ப்ரோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்.

2. தகவல் கேட்டவுடன் சம்பவ இடம் சென்று அங்கிருந்து நானும், யுவராஜ், கனகராஜ் ஆகியோர் ஊத்துக்குளி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்து எனது தந்தையை திருப்பூர் ரேவதி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். எனது தந்தையின் பின்னந்தலையில் பலத்த காயம் இருந்தது. அவரது கையிலும், காலிலும் சிராய்ப்பு காயம் இருந்தது. எனது தந்தையின் நிலைமை மோசமாக இருந்த காரணத்தினால் அவரை அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2025.12.02 15:57:24 +0530

மாற்றினோம். அங்கு சிகிச்சையில் இருந்தபோது எனது தந்தை 13.03.2022 ஆம் தேதி இறந்து விட்டார்.

3. இந்த விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை ஊத்துக்குளி அரசு மருத்துவமனையிலும், கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் இருந்த சமயத்தில் நான் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . நான் அதில் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன் (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. சம்பவ சமயத்தில் எனது தந்தையின் வயது 58. எனது தந்தைக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு பதிவு சான்று மற்றும் காப்பீடு உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தந்தை பால கணபதி சிற்பக் கலைக்கூடத்தில் பணியாற்றி விட்டு வந்தபோது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் ஆமாம். எனது தந்தை பணியாற்றிய மேற்படி சிற்பக் கலைக்கூடம் கவுண்டம்பாளையம் நால்ரோட்டில் இருந்து மேம்பாலம் ஏறும் இடத்தில் உள்ளது. சம்பவ சமயத்தில் எனது தந்தை வடக்கிலிருந்து இருந்து தெற்கு நோக்கி சென்றாரா என்றால் திருப்பூரை நோக்கி சென்றார், திசை தெரியவில்லை.

2. எனது வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து மேற்க்காக திரும்பி செல்ல வேண்டுமென்றால் சரிதான். எனது தந்தை அவ்வாறு சென்று மேற்கு நோக்கி சாலையை கடந்த

போது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் எனது தந்தை முக்கால் வாசி ரோடு கடந்துவிட்ட பின்பு தான் விபத்து ஏற்பட்டது. பெட்டிக்கடை பேருந்து நிறுத்தம் அருகில் பேரிகார்ட் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பேரிகார்டை எதிரி கடந்த வந்த பின்பு தான் விபத்து ஏற்பட்டது என்றால் பேரிகார்ட் அந்த சமயத்தில் இருந்ததா என்று எனக்கு தெரியவில்லை.

3. யுவராஜ் மற்றும் கனகராஜ் சம்பவம் பற்றி போன் மூலம் கேள்விப்பட்டு தான் அங்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது, அங்கு தான் இருந்ததாக சொன்னார்கள். நான் புகார் கொடுத்த போது மணி எவ்வளவு இருக்கும் என்றால் தோராயமாக இரவு 08.00 மணி இருக்கும். நான் பின்பு காவல் நிலையம் வரவில்லை நேராக ரேவதி மருத்துவமனைக்கு சென்று விட்டேன். நான் ரேவதி மருத்துவமனையில் இருந்த போது மறுபடியும் புகார் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் ரேவதி மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்தார்களா என்றால் தெரியவில்லை. இந்த வழக்கில் உள்ள மற்ற சாட்சிகள் எனது ஊர்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான்.

4. எனது தந்தை தான் வாகனத்தை சரிவர ஓட்ட தெரியாமல், வயோதிகம் காரணமாக சாலையில் வந்த வாகனங்களை கவனிக்காமல், திடீரென்று எந்த ஒரு செய்கையையும் செய்யாமல், மேற்காக சாலையை கடந்து விபத்தை தாமாக ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி

# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKUL

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 95 OF 2022** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **கனகராஜ்** |
| Father Name | : | **பொன்னுச்சாமி** |
| Age | : | **47** |

**Accused absent**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.12.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது தொட்டியவலவில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் டெய்லராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022, மார்ச் மாதம் தேதி ஞாபகம் இல்லை, மாலை 06.30 மணியளவில் நானும் யுவராஜ்-ம் பெட்டிக்கடை பஸ் ஸ்டாப் அருகே டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது மாணிக்கம் ஸ்கூட்டி வாகனத்தில் திம்மநாயகன்பாளையத்திலிருந்து பெட்டிக்கடை நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது பின்னால் இருந்து வந்த TN 56 B 2671 என்ற பதிவு எண் கொண்ட பேஷன் ப்ரோ வாகனம் அவரது வாகனத்தின் மீது மோது விபத்து ஏற்பட்டது. அதில் மாணிக்கத்திற்கு தலையிலும், காலையிலும் அடிபட்டது. நாங்கள் தகவல் சொன்னதன் பேரில் மோகன்ராஜ் அங்கு வந்தவுடன், நான், யுவராஜ் மற்றும் மோகன்ராஜ் மாணிக்கத்தை ஆம்புலன்ஸ் மூலம் ஊத்துக்குளி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

2. சம்பவத்தின் போது வாகனத்தை ஓட்டி வந்த நபரை எனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும் (எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை

அவரது தரப்பில் 317 Cr.P.C ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரியின் அடையாளத்தை பொருத்தவரையில் எந்த ஒரு ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை). மாணிக்கம் சிகிச்சை பலனின்றி கோயம்புத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்த போது இறந்துவிட்டார். போலீசார் பிரேத விசாரணையின் போது என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. சம்பவ சமயத்தில் மாணிக்கத்திற்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. மாணிக்கம் பால கணபதி சிற்பக் கலைக்கூடத்தில் பணியாற்றி விட்டு வந்தபோது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் ஆமாம். மாணிக்கம் அவரது வீட்டிற்கு சென்ற போது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் ஆமாம்.

2. அவரது வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து மேற்க்காக திரும்பி செல்ல வேண்டுமென்றால் சரிதான். மாணிக்கம் அவ்வாறு சென்று மேற்கு நோக்கி சாலையை கடந்த போது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் சரிதான். மாணிக்கம் சாலையை கடப்பதற்கு முன்பாக வாகனத்தை நிறுத்தி சாலையில் வரும் வாகனங்களை பார்த்து கவனித்து கடந்து இருந்தால் விபத்து ஏற்பட்டு இருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும், போலீஸ் விசாரணையிலும் நீதிமன்றத்தில் முதல் விசாரணையிலும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு நஷ்டஈடு பெற வேண்டி ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKUL**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 95 OF 2022** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | **பூபதி** |
| Father Name | : | **ராஜா** |
| Age | : | **30** |

**Accused absent**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02.12.2025.

முதல் விசாரணை

1. நான் தற்போது தொட்டியவலவில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.03.2022-ம் தேதி மதியம் 02.00 மணி அளவில், நான் டீ குடிப்பதற்காக பேக்கரிக்கு சென்றபோது போலீசார் அங்கே விபத்து நடந்தது சம்பந்தமாக வரைபடம் வரைந்து, விபரம் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். உடன் நந்தகோபால் என்பவரும் கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(சாட்சிக்கு பார்வை மகஜரில் உள்ள சங்கதிகள் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒத்துக் கொள்ளப்பட்டது. பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவத்தன்று இரவு புகார் கொடுக்க நான், மோகன்ராஜ், யுவராஜ், கனகராஜ், பொம்முராஜ், நந்தகோபால் ஆகியோர் சென்றோமா என்றால் ஆமாம். அப்போது காவல் உதவி ஆய்வாளர் எங்களது பெயர் முகவரி ஆகியவற்றை குறித்துக் கொண்டு கையொப்பம் வாங்கினாரா என்றால் ஆமாம். அதில் சம்பவ இடத்தின் வரைபடம் மற்றும் அமைப்பு பற்றிய விவரம் இருந்ததா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மேற்படி காவல் நிலையத்தில் வைத்து செய்யப்பட்டது என்றால் ஆமாம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி